2003 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 67, திருமதி எஸ். ராஜம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்.

67—

செவிலியர் பயிற்சிக் கல்லூரி

***8631—திருமதி எஸ்.ராஜம்மாள்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி, அரசு சார்பாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் உடனடியாக செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடியில் அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

திருமதி எஸ். ராஜம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியானது, தூத்துக்குடி மாவட்டத்தின் தலைநகரம் ஆகும். இங்கே அரசு கலைக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ இல்லை. மருத்துவக் கல்லூரி இருப்பதால் இங்கு அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைந்தால் அண்டை மாவட்டங்களும் பயன்பெற வாய்ப்புண்டு. அரசு மறுபரிசீலனை செய்து, வரும் கல்வி ஆண்டிலாவது அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைக்கப்படுமா என்றுதான் மூலக்கேள்வியிலே கேட்டிருக்கிறார் அவர் அமைக்க விருப்பம் தெரிவித்திருப்பது, College of Nursing, B.Sc. Nursing படிக்க அந்தக் கல்லூரியை கேட்டிருக்கிறார். அதை அமைப்பதற்கு சாத்தியம் இல்லையென்றுதான் சொல்லியிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறபடி

செவிலியர் பயிற்சிப் பள்ளி School of Nursing-ஐ ஆரம்பிப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதேபோல செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் ஒரு செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, தூத்துக்குடியிலும் மிக விரைவில் செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 68, திரு. கோவை தங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

68—

மருத்துவமனை

***15922—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் குழந்தைகள் நல அரசு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வால்பாறை தொகுதியில் தனியாகக் குழந்தைகள் நல மருத்துவமனை அமைக்கும் திட்டம் இல்லை என்றாலும், தற்போது 38 படுக்கைகள் கொண்டதாக இருக்கும் அந்த மருத்துவமனையை மொத்தம் 50 படுக்கைகள் கொண்டதாக விரிவுபடுத்தி, 10 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே வைத்த கோரிக்கையை ஏற்று, தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மீது கருணை வைத்து குழந்தைகளுக்கு என்று தனியாக வார்டு கட்டிக் கொடுப்பதற்கு அவர்கள் ஏற்கெனவே எடுத்துக் கொண்ட முயற்சிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வால்பாறை சட்டமன்ற தொகுதியில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS